

■ கோயம்பேடு பஸ் நிலையம் அருகே, மெட்ரோ ரயில் பாதையில் பதிக்க, பாலத்தின் மீது தண்டவாளம் ஏற்றப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் பாதையில்

# தண்டவாளம் அமைக்கும் பணி துவக்கம்

கோயம்பேடு, மே 2-

மெட்ரோ ரயில் ஓடும் பாதைக்காக, தண்டவாளங்களை பாலத்தின் மீது ஏற்றும் பணி துவங்கியது.

சென்னை கோயம்பேடு - கிண்டி இடையே மெட்ரோ ரயிலுக்கு பாலம் அமைத்து, பக்கவாட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. அடுத்தக்கட்டமாக, மெட்ரோ ரயில் செல்லும் தண்டவாள பாதை அமைப்பதற்கான பணி துவங்கியது.

பில்லர்கள மற்றும் பாலம் அமைக்கும் பணியை 'சோமா' நிறுவனத்தார் மேற்கொண்ட நிலையில், தண்டவாள பாதை அமைக்கும் பணியை 'லார்சன் டூப்ரோ' நிறுவனத்தார் மேற்கொள்ளவுள்ளனர். இதற்காக, 3,000 டன் தண்டவாளங்கள் பூந்தமல்லியை அடுத்த பாரிவாக்கம் பகுதியில் வைக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து இரவில் கனரக வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் தண்டவாளங்களை, கிரேன் உதவியுடன் பாலத்தின் மீது ஏற்றப்படுகிறது. பாலத்தில், 100க்கும் மேற்பட்ட தண்டவாளங்கள் கொண்டு வந்து சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழித்தடத்தில் 88வது பில்லரில் துவங்கி, வடபழனியை நோக்கி தண்டவாளங்களை பதித்து, தண்டவாள பாதை அமைக்கும் பணி சில நாட்களில் துவங்கவுள்ளதாக, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.